விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 286 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 15 புதன்கிழமை (01.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

## போதை வியாபாரிகளைப் பாதுகாத்தவர் ராஜபக்ஷ; மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர் ரணில்

### இனவாதத்தைத் தூண்டி இருப்பைத் தக்கவைக்க முயற்சி – அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

இந்நாட்டில் போதைப்பொருள் வியாபாரிகளைப் பாதுகாத்தவர் தான் ராஜபக்ஷ. கடந்த காலங்களில் மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர்தான் ரணில். இவர்கள் இருவரும் இனவாதத்தைத் தூண்டி இருப்பைத் தக்கவைக்க முயற்சி செய்கின்றனர் என கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் மீள் ஆரம்ப நிகழ்வு மட்டுவிலில் நேற்றுக் காலை நடைபெற்றது.

அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொருளாதார ரீதியில் இலங்கை வேகமாக முன்னேறி

15ஆம் பக்கம் பார்க்க

## விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

### யாழில் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என. வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



முல்லைத்தீவில்

## சுகவீனம் காரணமாக மாணவன் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுகவீனம் காரணமாக மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு கற்சிலைமடுவைச் சேர்ந்த பாணுசன் என்பவரே உயிரிழந்தவராவார்.

சிறுநீரக மாற்று சிகிச்சை

15ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் படி நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி ஒட்டோ டீசல்

15ஆம் பக்கம் பார்க்க

## லலித், குகன் கடத்தப்பட்டு காணாமல்போன விவகாரம்

### மீண்டும் விசாரணை ஆரம்பம்



(கொழும்பு)

லலித் மற்றும் குகன் ஆகியோர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம்

15ஆம் பக்கம் பார்க்க

அரசின் வருமானம் அதிகரித்துள்ளதால்

## மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் சூழல் உருவாகியுள்ளது

### அமைச்சர் ஹந்துன்நெத்தி



(கொழும்பு)

அரசாங்கத்தின் சகலதுறைகளிலும் வருமானம் அதிகரித்துள்ளதால் பொதுமக்களுக்கு சலுகைகள், நிவாரணங்களை வழங்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் சுனில்

14ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரியில் வீதி விபத்து: இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் வைரவர் கோயில் சந்தியில், நேற்று மாலை மோட்டார் சைக்கிளும் காரும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

## ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை தொடர்பில்

### அதிர்ச்சித் தகவல் வெளியானது



(கொழும்பு)

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை தொடர்பில் அதிர்ச்சிச் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

இதன்படி ரக்பி வீரர் வசீம் தாஜுதீனை படுகொலை செய்ய வந்த குழுவில், சமீபத்தில் மித்தெனிய பகுதி

14ஆம் பக்கம் பார்க்க


வடக்கு, கிழக்கில்

## 100 பாடசாலைகளை புனரமைக்க ஜப்பான் உதவி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 100 பாடசாலைகளின் புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்கலுக்கான எதிர்காலத் திட்டங்களையும்

15ஆம் பக்கம் பார்க்க




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
27 - 10 - 1941



உதிர்வு
28 - 09 - 2025

# கந்தையா தர்மலிங்கம்

உடுவில் தெற்கு ஈஞ்சடி வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் செட்டி வீதி இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் அவர்கள் கடந்த 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா(சின்னக்கிளி) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லதா(லண்டன்), ஜெயக்குமார்(அப்பன்) (சுவிஸ்), சுமதி(பிரான்ஸ்), சுதா(பிரான்ஸ்), பிறேமன்(லண்டன்), ஜெசின்(இணுவில்), கார்த்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரத்தினம்(லண்டன்), அனித்தா (சுவிஸ்), சிவபாலன் (பிரான்ஸ்), ஞானசேகரம்(பிரான்ஸ்), யுகநிலா(லண்டன்), இதயதீபன்(லண்டன்), ராஜரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான அழகம்மா, குணலிங்கம் (விதானை), இராசலிங்கம்(குஞ்சுமணி) மற்றும் கமலராணி, செல்வராணி(பூ), யோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அண்ணாமலை மற்றும் சறோஜினிதேவி, விஜயராணி, மகேந்திரராசா, நடராஜா, ஜெயசூரிய, அமரர் நாகராசா(செட்டி) - தவமணிதேவி, அமரர் சதாசிவம், அமரர்களான கண்ணுத்துரை - இராஜேஸ்வரி, அமரர்களான கிருஸ்ணன் - கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.10.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்
076 662 9018

செட்டி வீதி,
இணுவில் மேற்கு.

(C-3297)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சிறுவர் தினத்தில் பிறக்கும்
அனைத்து குழந்தைகளின் பெற்றோருக்கும்
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் இடமிருந்து



ஒரு மில்லியன் ரூபாய்
ஆயுள் காப்புறுதி இலவசம்!

எமது நாட்டுப் பிள்ளைகளின் எதிர்காலத்தை பாதுகாக்கும் விதத்தில் 2025 ஒக்டோபர் 01ஆம் திகதியன்று உலக சிறுவர் தினத்தில் பிறக்கும் அனைத்து குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான காப்புறுதியொன்று ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் லைஃப் இடமிருந்து.

ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஃலைப் வழங்கும் மற்றுமொரு சமூக சேவையாகும்.

1377

www.sliclife.com

SLIC ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் LIFE

Company Registration Number - PB 286362

*நியதி நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

SLIC லைஃப் இலங்கை காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணைக்குழுவால் உரிமம் பெற்ற நிறுவனமாகும்.


(C-298)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாணம்- வண்ணையம்பதி ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள்

# தேர்த் திருவிழா சிறப்பு மலர் 01.10.2025

- வசந்தமண்டபபூசை காலை 7.00 மணி
- இரதோற்சவம் காலை 9.30 மணி







# ஈழத்தமிழரை காவல் செய்ய

## ஈழத்து திருப்பதியான் தேரேறி வருகிறான்

## 'ஈழத்து திருப்பதி வரலாறு'



வைணவம் சார்ந்த வைகாசன ஆகம விதி முறைகளுக்கு இணங்க ஏறத்தாழ பதினான்காம் நூற்றாண்டில் அரசோச்சிய தமிழ் மன்னனாகிய குணபூசன ஆரியன் செகராசசேகரனின் காலத்து சிறிய உருவில் வைணவ வழிப்பாட்டுத் தலமாக உருப்பெற்ற வண்ணை ஸ்ரீ வெங்கடேச பெருமான் ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பெற்றது.

பின்பு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வளர்ச்சி பெற்று சகல பரிவார மூர்த்திகளின் சந்நிதிகள் அமையப்பெற்ற நிலையில் பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தே உடைய ஒரு திவ்ய ஷேத்திரமாக விளங்கி வருகின்றது. அன்று தொடங்கி இன்று வரை இத் தேவஸ்தானத்தை வைணவ சமயத்தை சார்ந்த பத்மசாலிச் செட்டிப் பிள்ளைகள் பரிபாலனம் செய்து வருகின்றனர்.

### மகோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி



பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளாயினும் தத்துவ வெழுத்தை மாற்றியமைக்க முடியாது என்று விதியின் வலிமையின் மிகுதிப்பாடு கூறப்படுகிறது.

எனவே ஊழ்வினையினை வெல்லமுடியாதா? மனித முயற்சியெல்லாம் வீணாவதா என்ற வினா எழுகின்றது. இதற்கான விடை வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்" என்று கூறியிருக்கின்றார்.

பிறந்த ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் இறப்பது நிச்சயம் அது எப்போது என்பதை எவரும் திடமாக அறியமுடியாது. எனவே நாம் மண்ணில் பிறந்து விட்டோம் எமக்கு ஏற்படுகின்ற துன்பங்களிலிருந்து விடுபட எல்லாம் வல்ல காத்தல் கடவுளாகிய வேங்கடேச வரதராஜப் பெருமாளை இன்றைய தேர்த்திருவிழாவில் வேண்டி அவர் அருளுக்கு பாத்திரமாவோமாக என பெருமானின் பாதக் கமலங்களை பணிந்து ஆசி கூறி மகிழ்கின்றேன்.

"சர்வேஜன சுகினோ பவந்து"

**பிரம்மஸ்ரீ இ. ரமணிதரக்குருக்கள்**
**பிரதமகுரு.**
**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமான் தேவஸ்தானம்.**

### மகாசபை பெருந்தலைவரின் பிரார்த்தனை



உலகியல் வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற துன்பங்கள், துயரங்கள் நீங்க வேண்டுமானால் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்ற நாராயணனின் திருப்பாதங்களை வணங்குதல் வேண்டும் என்பதை "துயரது சுடரடி தொழுதெழுமன்னே" என நம்மாழ்வாரின் பாடல் குறிப்பிடுகின்றது. பாராளும் பெருமையிலும் பார்க்க பரந்தாமன் புகழ்பாடும் பெருமை சிறப்புடையது என நினைத்து முடியையே துறந்துவிட்டுச் சென்ற குலசேகர ஆழ்வார் ஸ்ரீரங்கப்பெருமான் மீது பாடிய பாடல் அவருடைய பக்தியின் உயர்வு நிலையை எடுத்துக் காட்டுகிறது. மார்க்கண்டேய பக்த சால்ய வைசியகோத்திரத்தி லுதித்த அடியார்க்கு நல்லான் என்பவரால் நிர்மாணிக் கப்பட்ட இவ் வாலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் மஹோற்சவ பெருவிழாக்கள் யாவும் சிறப்பாக அமையும் இன்றும் வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேரேறி அருள்தர வருகின்ற திவ்வியமான திருக்காட்சி அற்புதமாக அமைந்து விடுகின்றது. எம்பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**" கோவிந்த நாம சங்கீர்த்தனம்"**
**நாராயணசாமி - ஸ்ரீரமேசன்,**
**தலைவர் (ஈழத்து திருப்பதி தேவஸ்தானம்)**

### அரங்கனின் பதம் தொழுது வரங்கள் பெறுவோம் வடம் பிடிக்க வாரீர்

ஈழத்து திருப்பதி எனப் போற்றப்படும் இவ் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜ பெருமாள் ஆலயம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. வேண்டுவார் வேண்டும் வரமனைத்தையும் தரும் பெருமாள் இன்று தேரிலே ஆரோகணிக்கின்ற திருக்காட்சி அற்புதமானது.

கொண்டல்வண்ணனைக்கோவலனாய்வெண்ணையுண்ட வாயன் எனதுள்ளம் கவர்ந்தானை அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்பதாக திருப்பாணாழ்வார் அனுபவித்தது போல அரங்கனை அனுபவிக்க வேண்டும் அப்பொழுதே மனம் ஒரு நிலைப்பட்டு அமைதியும் ஆனந்தமும் ஏற்படும் இத்தகு வேங்கடவனை தேரினில் தரிசிப்போம் வாரீர்.

**"கோவிந்த்நாம சங்கீர்த்தனம்"**
**சைவசித்தாந்த பண்டிதர் செந்நாப்புலவர்**
**வர்ணனைக் கலாநிதி**
**மதுரகவி. காரை.எம்.பி.அருளானந்தன் M. A**
**(சர்வதேச ஒளிபரப்பாளர் DAN TV, ஓம் TV )**

### காத்தல் கடவுள் காவல் செய்ய தேரேறுகிறார்



அகில உலக இரட்ஷகன் கருணைக்கடல் நாயகன் யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜ பெருமாளுக்கு இன்று (01.10.2025) புதன் கிழமை மிகவும் சிறப்பாக தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. தர்மத்தை காக்க யுகம் தோறும் அவதரித்த பரந்தாமன் பார்த்தனுக்கு சாரதியாக "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என அனைவருக்கும் தத்தமது கடமைகளை உணர்த்திய வேங்கடவன் இன்று தேரிலேறி எம்மிடமுள்ள ஆணவம் கன்மம், மாயா மலங்களை நீக்க வருகின்றார்.

அவரது திருப்பாத கமலங்களை பற்றி வாழ்வாங்கு வாழ்வோமாக.

**சிவத்திரு. ப.ஜெய்கிருஷ்ணா ,**
**பொருளாளர் (ஈழத்து திருப்பதி தேவஸ்தானம்)**

### ஈழத்து திருப்பதியானின் தேர் வடம் பிடித்து அருள் பெற வாரீர்



ஈழத்து வடபால் யாழ்.மாநகரின் கண் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரர்க இன்று சித்திரத் தேர் அமர்ந்து அருள் பாலிக்கும் திருக்காட்சி காண கண் ,பலகோடி வேண்டும்.பெருமாளின் தேர் வடம் பிடித்து அருட் கடாட்சத்தைப் பெற அனைவரும் வாரீர் வாரீர். " கோவிந்த நாம சங்கீர்த்தனம்"

**சிவத்திரு. ப.ரிஷிகேசன்,**
**செயலாளர் (ஈழத்து திருப்பதி தேவஸ்தானம்)**

### ஓம் TV யில் தேர்த்திருவிழா நேரடி ஒளிபரப்பு

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் 10 தினங்களும் நடைபெறும் மகோற்சவ பெருவிழாக்கள் யாவும் ஓம் தொலைக் காட்சியில் தினமும் ஒளிபரப்பாகி வரும் இவ்வேளையில் இன்று (01.10.2025) புதன் கிழமை காலை நடைபெறும் தேர்த்திருவிழா நேரடியாக ஒளிபரப்பாகவுள்ளது நேரடி ஒளிபரப்பு நேர்முக வர்ணனையை ஓம் தொலைக்காட்சியின் பிரதம வர்ணனையாளர், வர்ணனைக் கலாநிதி மதுரகவி.காரை. எம்.பி.அருளானந்தன் நிகழ்த்தவுள்ளார்.

### "மண்ணில் நல்லவண்ணம் வாழ மாலவனைப் பணிவோம்"



இன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாளின் தேர்த்திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெறுகிறது.

இந் நன்நாளில் பகவானின் திருவருள் வேண்டி பெருமானின் சந்நிதி நாடி வருகை தந்து வழிபடும் அன்பர்களுக்கு நல்லருள் பெருக வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்

ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரரான ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருத்தேரில் ஆரோகணித்து அபயம் செய்து எம்மையிங்கு காவல் செய்ய வலம் வருகின்றார். நாமும் பெருமானின் திருப்பாதங்களில் சரண்புகுந்து நல்ல வண்ணம் வாழ்வோமாக.

**"கோவிந்த நாம சங்கீர்த்தனம்"**
**தி.சிவரூபன் (மகாசபை உறுப்பினர்)**

## 'ஆதீன மகா சபை'

(C-3991)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்தும்

## சேவை நலன் பாராட்டும்

திருமதி.

**தவச்செல்வி செல்வராசா**

(ஆசிரியர்)

(B.A(Hons), M.A(Distinction), PGDE, SLTS-I)

சேவை விபரம்

- மு/புதுக்குடியிருப்பு ம. கல்லூரி (20.09.2005 – 22.02.2006)
- கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலை (23.02.2006–03.01.2010)
- கிளி/பளை மத்திய கல்லூரி (04.01.2010 – 16.05.2013)
- யா/கொக்குவில் இந்துக்கல்லூரி (17.05.2013 – 01.09.2016)
- யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை (02.09.2016 – 30.09.2025)




இன்றைய தினம் தனது 58 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் எமது ஆசிரியர் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் அவர் தம் ஓய்வுக்காலம் சிறப்புற இறைவனை பிரார்த்திக்கின்றோம்

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.



# சேவை நலன் பாராட்டு

திரு. தம்பிராசா சிவசோதி



ஆங்கிலம் SLTS - I

சேவை விபரம்

- யா/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் (09.01.1997 - 04.09.1997)
- யா/நாவாந்துறை றோ.க.த.க.பாடசாலை (05.09.1997 - 17.01.1999)
- ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பலாலி (18.01.1999 - 09.01.2001)
- யா/நாவாந்துறை றோ.க.த.க.பாடசாலை (10.01.2001 - 06.07.2010)
- யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் (07.07.2010 - 01.01.2012)
- யா/மண்டைதீவு மகா வித்தியாலயம் (02.01.2012 - 31.07.2014)
- யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம் (01.08.2014 - 03.01.2017)
- யா/ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலயம் (04.01.2017 - 01.10.2025)

(5546)

ஆங்கில ஆசிரியராக அளப்பரிய சேவையாற்றி 2025.10.01 இன்று ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற எமது வித்தியாலய ஆசிரியர் திரு.தம்பிராசா சிவசோதி அவர்களை வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வாழ்த்துவோர்- பாடசாலைச் சமூகம் யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.


## பிரசன்ன ரணவீரவுக்கு பிணை

(கொழும்பு)

அரசுக்கு சொந்தமான காணியை போலிஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். கம்பஹா மேல் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமையவே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிரசன்ன ரணவீர சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகளின் வாதங்களைப் பரிசீலனை செய்த கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி, பிரசன்ன ரணவீர மற்றும் சரத் எதிரி சிங்க ஆகிய இரு சந்தேக நபர்களையும் கடுமையான பிணை நிபந்தனைகளின் கீழ் விடுவிக்க உத்தரவிட்டார்.

அதன்படி, ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் ஒரு ரொக்கப் பிணை மற்றும் தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் ஐந்து சரீரப் பிணைகளில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியது. அத்துடன், சந்தேக நபர்களின் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)


# இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி

(முன்பதிவு செய்து வரவும்)

(C-3992)


# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 180 | 250 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 200 | 250 |
| தக்காளி | 200 | 250 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 300 | 250 | 200 |
| கோவா | 180 | 200 | 200 | 150 | 200 |
| கரட் | 200 | 250 | 300 | 250 | 300 |
| பூசணி | 60 | 60 | 100 | 40 | 50 |
| புடோல் | 100 | 200 | 150 | 150 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 450 | 600 |
| வெண்டக்காய் | 250 | 250 | 100 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 150 | 200 | 100 | 250 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 250 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 350 | 350 | 300 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 300 | 200 | 250 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 140 | 300 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 120 | 60-120 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000 | 1100 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-230 | 160-220 |
| இராசவள்ளி | 600 | 1000 | 1000 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 100 | -- |

# இராசிபலன்

01.10.2025
புரட்டாதி 15 , புதன்கிழமை
நவமி பிற்பகல் 3.21 மணிவரை
உத்தராடம் முழுவதும்

சுப நேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
மகாநவமி விரதம்
சர்வதேச சிறுவர் தினம்,

முதியோர் தினம்
சந்திராஷ்டமம்
திருவாதிரை

**வளவன்**




சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் கௌரவம் கூடும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.




வீட்டுத் தேவைகளை நிறைவுசெய்யும் எண்ணம் உருவாகும், நம்பி வந்தவர்களுக்கு கை கொடுத்து உதவுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.




வருமானத்தை அதிகரிக்கும் வகையில் நாட்டம் செல்லும், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அலைச்சல்கள் குறைந்து ஆனந்தம் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு




இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும்.




உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள்.




உறவினர்களின் நலன் கருதி சில செலவுகளை செய்வீர்கள், சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், வேலைச்சுமை கூடும், சயனக் குறைவான நாள்




சில பிரச்சினைகளை கண்டும் காணமலும் இருப்பது நல்லது, சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்




தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.





அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**உதவிக்கரமா? உன்னிடம் இரண்டு கரங்கள் உள்ளன.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத் தொடரில் யூனியன்ஸ் அணி காலிறுதிக்கு தெரிவு



ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத் தொடரின் 2 ஆவது சுற்றில் 8 ஆவது போட்டி கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யூனியன்ஸ் அணி, அரியாலை சென்றல் அணியை 86 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது.

நாயணச்சுழற்சியில் வெற்றி பெற்ற யூனியன்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்ட போது 27 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரகுபதி 27 ஓட்டங்களையும், சுஜாந்தன் 21 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 31 ஓட்டங்களையும், லவன்ராஜ் 48 ஓட்டங்களையும், மகில்ராஜ் 24 ஓட்டங்களையும், மகிலராஜ் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அரியாலை அணியைச் சேர்ந்த சதீஸன் 2 இலக்குகளையும், சின்தீலன் 3 இலக்குகளையும், தானுஜன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

213 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய அரியாலை சென்றல் 27 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தூவாரகன் 24 ஓட்டங்களையும், சதீஸ் 24 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர். பந்துவீச்சில் மோகன்ராஜ் 4, மகீதரன், பவிதரன், தலா 01 இலக்குகளையும் கைப்பற்றினர். (3)





உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகம் நடத்திய வடமராட்சிக்குட்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் கயிறு இழுத்தல் போட்டியில் பருத்தித்துறை அஞ்சல் அணியும் சம்பியனைக் கைப்பற்றியிருந்தன. இவ்விரு அணிகளுக்குமான வெற்றிக் கேடயங்களை வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி நாயகம் திருமதி நிவேதிகா கேதீசன் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்திய தீவுகளுக்கு அதிர்ச்சியளித்து புதிய வரலாறு படைத்த நேபாளம்



ஷார்ஜாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இருபதுக்கு இருபது சர்வதேச போட்டியில் மேற்கிந்திய தீவுகளை 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி நேபாளம் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த வெற்றியின் மூலம், நேபாளம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என வென்றது.

இது ஒரு அணிக்கு எதிரான அதன் கிரிக்கெட் வரலாற்றில் மிக முக்கியமான தொடர் வெற்றியை உறுதிப்படுத்தியது.

முன்னாள் இருபதுக்கு இருபது உலக சம்பியனான மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக ஒரு இணை நாடு பெற்ற மிகப்பெரிய வெற்றியாக இது கருதப்படுகிறது.

மேலும் இது உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களிடையே அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாளம் 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 173 ஓட்டங்கள் எடுத்தது. நேபாளம் தரப்பில் அதிகபட்சமாக ஆசிப் ஷேக் 68 ஓட்டங்களும் சந்தீப் ஜோரா 63 ஓட்டங்களும் எடுத்தனர்.

மேற்கிந்திய தீவுகள் தரப்பில் அஹேல் ஹொாசைன், கைல் மேயர்ஸ் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். தொடர்ந்து 174 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த மேற்கிந்திய தீவுகள் அணி, நேபாள வீரர்களின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. இறுதியில் மேற்கிந்திய தீவுகள் அணி 17.1 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 83 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

இதன் மூலம் 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நேபாளம் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2-0 என நேபாளம் கைப்பற்றி விட்டது.

## ஆசியக்கிண்ண இறுதிப் போட்டியில் தோல்வி!

# பரிசுத் தொகையை தூக்கி எறிந்த பாகிஸ்தான் அணித் தலைவர் சல்மான்




2025 ஆசிய கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில், இந்திய அணி பாகிஸ்தானை 3 ஆவது முறையாக வீழ்த்தி, தனது 9ஆவது பட்டத்தை வென்று வரலாறு படைத்தது.

இந்த வெற்றி ஒருபுறம் இருக்க, போட்டிக்குப் பிந்தைய கிண்ணம் வழங்கும் விழாவில், தோல்வியின் விரக்தியைத் தாங்கிக்கொள்ள முடியாத பாகிஸ்தான் அணி தலைவர் சல்மான் அலி அகா, இரண்டாம் இடத்திற்கான பரிசுத் தொகையைத் தூக்கி எறிந்த சம்பவம், பெரும் சர்ச்சையையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியது.

இந்தத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் 3 முறை மோதின. குரூப் சுற்று, சூப்பர் 4 சுற்று மற்றும் இறுதிப் போட்டி என 3 முறையிலும் இந்திய அணியே வெற்றி பெற்றது. இதில் இறுதிப் போட்டி மட்டுமே கடைசி ஓவர் பரபரப்பு வரை சென்றது. மற்ற இரண்டு போட்டிகளில் இந்திய அணி எளிதாக வெற்றி பெற்றது. இது தான் பாகிஸ்தான் அணி தலைவரின் விரக்திக்கு காரணமாக இருந்தது.

போட்டி முடிந்த பிறகு, பாகிஸ்தான் அணித் தலைவர் சல்மான் அலி அகாவின் முகத்தில் தோல்வியின் விரக்தி அப்பட்டமாகத் தெரிந்தது. இரண்டாம் இடத்திற்கான பரிசுத் தொகையைப் பெற்றுக்கொள்ள அவர் மேடைக்கு அழைக்கப்பட்டார்.

ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் மோஷின் நக்வியிடமிருந்து பரிசுத் தொகையைப் பெற்றுக் கொண்ட சில நொடிகளிலேயே, தனது விரக்தியை வெளிப்படுத்தும் விதமாக, அந்தப் பரிசுத் தொகையை அவர் அங்கேயே தூக்கி எறிந்தார்.

அவரது இந்தச் செயல், அங்கிருந்த அனைவரையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா அமைதித் திட்டம் ஆதரவு தெரிவித்த நெதன்யாகு

**(வோஷிங்டன்)**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், பரந்த அளவிலான காசா அமைதித் திட்டத்திற்கு பெஞ்சமின் நெதன்யாகுவின் ஆதரவைப் பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



அதேநேரம், பாலஸ்தீன போராளிகள் அதை ஏற்கத் தவறினால் ஹமாஸுக்கு எதிரான வேலையை முடிப்பேன் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலையைச் செய்ததாக ஐ.நா. புலனாய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான 20 அம்ச திட்டத்தின் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்திய வகையில், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட திட்டம் குறித்து ஹமாஸ் இன்னும் தனது தீர்ப்பை வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் போர் நிறுத்தம், 72 மணி நேரத்திற்குள் ஹமாஸால் பணயக்கைதிகளை விடுவித்தல், ஹமாஸை நிராயுத பாணியாக்குதல் மற்றும் காசாவிலிருந்து படிப்படியாக இஸ்ரேல் வெளியேறுதல், அதைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான போருக்குப் பிந்தைய இடைக்கால அதிகாரம் ஆகியவற்றைக் கோருவதாக அமைந்துள்ளது.

காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உங்கள் திட்டத்தை நான் ஆதரிக்கிறேன், என நெதன்யாகு அமெரிக்க ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

ஹமாஸ் உங்கள் திட்டத்தை நிராகரித்தால் அல்லது அவர்கள் அதை ஏற்றுக்கொண்டதாகக் கூறி, பின்னர் அதை எதிர்க்க எல்லாவற்றையும் செய்தால், இஸ்ரேல் தானாகவே வேலையை முடிக்கும். ஹமாஸ் ஒப்பந்தத்தை ஏற்கவில்லை என்றால், இஸ்ரேலுக்கு தனது "முழு ஆதரவு" இருக்கும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (நி)

# இணையத்தை துண்டித்த தலிபான்கள் ஆப்கானில் தொலைத்தொடர்பு முடக்கம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசாங்கம், ஃபைபர் - ஆப்டிக் இணைய இணைப்புகளைத் துண்டிக்கத் தொடங்கிய சில வாரங்கள் கழித்து, நாடளாவிய ரீதியில் தொலைத்தொடர்புகளை முடக்கியுள்ளது.

ஆப்கானிஸ்தான் தற்போது "முழுமையான இணைய முடக்கத்தை" சந்தித்து வருவதாக, இணைய கண்காணிப்பு அமைப்பான நெட்பிளாக்ஸ் தெரிவித்துள்ளது.

தலைநகர் காபூலில் உள்ள அலுவலகங்களுடனான தொடர்பை சர்வதேச செய்தி நிறுவனங்கள் துண்டித்துள்ளதாகக் கூறுகின்றன.



ஆப்கானிஸ்தான் முழுவதும் கையடக்க தொலைபேசிக்கான இணைய வசதி மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. முடக்கத்திற்கான உத்தியோகபூர்வ காரணத்தை தலிபான்கள் இன்னும் தெரிவிக்கவில்லை. 2021 இல் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து, இஸ்லாமிய ஷரியா சட்டத்தின் விளக்கத்தின்படி தலிபான்கள் ஏராளமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

தொலைத்தொடர்பு முடக்கம் மறு அறிவித்தல் வரும் வரை நீடிக்கும் எனத் தலிபான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (நி)

## நீண்டதூர ஏவுகணைகளை

# உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா திட்டம்

(வோஷிங்டன்)

ரஷ்ய படைகளைத் தாக்க நீண்டதூரம் சென்று தாக்கும் திறன் கொண்ட டொமாகாக் ஏவுகணைகளை உக்ரைன் கோரியுள்ள நிலையில், இந்தக் கோரிக்கையை அமெரிக்கா பரிசீலித்து வருகிறது.

இது குறித்த இறுதி முடிவை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எடுப்பார் என்று துணை ஜனாதிபதி ஜே.டி.வேன்ஸ் தெரிவித்துள்ளார். டொமாகாக் ஏவுகணைகள் சுமார் 2,500 கி.மீ (1,550 மைல்கள்) தூரம் வரை சென்று தாக்கும் திறன் கொண்டவை.

இவை உக்ரைனுக்கு வழங்கப்பட்டால், ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோ கூட உக்ரைனின் தாக்குதல் வரம்பிற்குள் வரும்.

முன்னதாக நீண்டதூரத் தாக்குதல் ஏவுகணைகளை வழங்குவதை ட்ரம்ப் நிராகரித்திருந்தாலும், இப்போது அவர் அனுமதி வழங்கும் முடிவுக்கு தயாராக இருப்பதாகத் தோன்றுகிறது என அமெரிக்காவின் உக்ரைன் சிறப்புத் தூதர் கீத் கெல்லாக் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், இந்த ஆயுதங்கள் போர்க்களத்தின் நிலையை மாற்றாது என்று தெரிவித்தார். (நி)

# ஆரம்பத்திலிருந்தே சேமிக்க கற்பிக்கும் RDB வங்கி



நாட்டின் முதன்மை அரச அபிவிருத்தி வங்கியாகிய பிரதேச அபிவிருத்தி வங்கி **(RDB)** நான்கு தசாப்தங்களாக இலங்கையர்களின் இதயத்திற்கும் மனதிற்கும் நெருங்கி பாரியளவிலான சேமிப்பு மற்றும் நிதிச் சேவைகளை வழங்குகின்றது. இதுவரையில் வங்கியால் சிறார்களிலிருந்து பெரியவர்கள் வரையானவர்களுக்கு சேமிப்புக் கணக்குகள் பலவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

சிறார்கள் தேசமொன்றின் எதிர்காலமாகுவதுடன் அவர்களை நாட்டின் உயிர்நாடியாகவும் இனங்காணலாம். அவர்களின் எதிர்காலத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த அவர்களுக்கு சரியான கல்வியறிவு மற்றும் வழிகாட்டல் வழங்குவது பெற்றோரினதும் பாதுகாவலரினதும் பொறுப்பாகும்.

அதற்கிணங்க சிறுபராயம் முதல் சிறுவர்களின் மனதில் சிக்கனத்திற்கு பெறுமதியை ஏற்படுத்துதல் மற்றும் நாட்டிற்கு நிதியியல் ரீதியில் ஒழுக்க நெறி முறையுடைய சிறுவர் பரம்பரையை உருவாக்கும் நோக்கில் கவர்ச்சிகரமான வட்டியுடன் மேலும் பிரதிபயன்கள் பல உரித்தாகும் சேமிப்புக் கணக்கொன்றான **RDB** கெகுளு கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இம்முறை சர்வதேச சிறுவர் தினத்தில் சிறார்களுக்கு வழங்கக்கூடிய பெறுமதிமிக்க பரிசொன்றாக நட்புறவுச் சூழலுக்கான **RDB** கெகுளு சேமிப்பு உண்டியலை அறிமுகப்படுத்துகின்றது. அதனை பிற்காலத்தில் பென்சில் தாங்கியாகவும் **Pen Holder** பயன்படுத்த முடியுமானவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

2025 ஒக்டோபர் 01ஆம் திகதி முதல் **RDB** வங்கிக் கிளைகளுக்கு வருகை தந்து கெகுளு கணக்குடன் தொடர்புபடும் சிறார்களுக்கும் தமது பழைய சேமிப்பு உண்டியலை வங்கிக்குக் கொண்டுவரும் சிறார்களுக்கும் இவ்விஷேட சேமிப்பு உண்டியலை வழங்க **RDB** கிளை வலையமைப்பு நடவடிக்கையெடுத்துள்ளது.

**அதற்கு மேலதிகமாக RDB கெகுளு கணக்குரிமை சிறார்களுக்காக**

**கல்விப் பயிற்சிப் பட்டறைகள், கணக்கு மீதியின் மீதான விஷேட பரிசு முறைகள், கல்வி வெற்றிக் கௌரவிப்புகள், 5ஆம் ஆண்டு சிறார்களுக்கு புலமைப்பரிசில், விஷேட சேமிப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

போன்ற சேமிப்பு பழக்கத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் பல ஆண்டு முழுவதும் **RDB** வங்கியால் மேற்கொள்ளப்படுவதுடன் உங்கள் சிறுவர் சிறுமியர்களுக்கும் கெகுளு கணக்கொன்றினை ஆரம்பித்து இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கௌரவபூர்வமாக அழைக்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணிவிழாவும் சிறுவர் தின நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கணேச வித்தியா சாலையின் வாணி விழாவும் சிறுவர் தின நிகழ்வும் இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊரெழு கணேச வித்தியாலயப் பழைய மாணவன் தி.உதய சூரியன், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் சைவப்புலவர் செ.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8-3)

## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து
### யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



(யாழ்ப்பாணம்)

சம்பள, பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் அரச பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நேற்று ஒருநாள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அதற்கிணங்க நேற்றுக் காலை யாழ் பல்கலைக் கழக முன்றலில் விரிவுரையாளர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-8-104-33)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உதய சூரியன் சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை காங்கேசன்துறை சந்தை வீதியில் அமைந்துள்ள உதயசூரியன் சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர் பூ.பிரபாகர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் க.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யூலியன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)



மட்டுவில் பகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் மீள் ஆரம்பிப்பு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராசா, ஜெ.றஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

யா/கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலய வாணி விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.ரமணராஜா, சிறப்பு விருந்தினராக வட மாகாண கமநல அபிவிருத்தி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. தரணிகா விஜிந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## வரவு செலவு திட்டம் ஊடாக வரணியில் 4 வீதிகள் புனரமைப்பு
### பிரதேச சபை தவிசாளர்

(சாவகச்சேரி)

2025 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் மூலம் வரணிப் பிரதேசத்தில் நான்கு வீதிகள் புனரமைக்கப்பட்டிருப்பதாகச் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் பொ.குகதாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

வரணிப் பிரதேசத்தில் சிமிழ் கண்ணகை அம்மன் கோவில் வீதி மூன்று மில்லியன் ரூபாய் செலவிலும், கும்பிட்டான் புல ஆயை வீதி மூன்று மில்லியன் ரூபாய் செலவிலும்,இடைக்குறிச்சி - மாசேரி ஊரெல்லை வீதி நான்கு மில்லியன் ரூபாய் செலவிலும் மற்றும் வரணி ஆழ்வார் மட வீதி 4மில்லியன் ரூபாய் செலவிலும் சபை நிதியில் புனரமைக்கப்பட்டுள்ளன.

அதனைவிட உலக வங்கி ஊடான நிதி மூலம் கலைவாணி வீதி மற்றும் வரணி பாடசாலை அருகாமை வீதி ஆகியன காபெட் வீதிகளாக புனரமைக்கப்படவுள்ளன.

மேலதிகமாக அம்மாகடை வீதி முதலாம் குறுக்குத் தெரு ஒன்பது இலட்சம் ரூபாய் செலவில் கிரவல் வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை அன்பளிப்பாக வழங்கிய கிரவல் மூலமும் வரணியில் நான்கு வீதிகள் கிரவல் வீதிகளாகப் புனரமைக்க எதிர்பார்த்துள்ளோம்.

நாவலடிப் பிள்ளையார் வீதி, ஆழ்வார்மட வீதி, மாசேரி-இடைக்குறிச்சி ஊரெல்லை வீதி,மாணிக்கவாசகர் வீதி ஆகியன மேற்படி கிரவல் ஊடாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் களத் தரிசிப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருப்பதாக மேலும் அவர் தெரிவித்திருந்தார். (8-30)

## காந்தி ஜெயந்தி விழாவும் சிறுவர் தின நிகழ்வும்


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்தும் 156 ஆவது காந்தி ஜெயந்தி விழாவும் உலக சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி உருத்திரபுரம் டி-8 இல் அமைந்துள்ள காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையத் தலைவர் திருமதி. ரதி குணசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி/முருகானந்தாக் கல்லூரி அதிபர் அ.பங்கயற்செல்வன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட நன்னடத்தை அலுவலக சிரேஷ்ட உத்தியோகத்தர் ருவான் பிரசாத் தர்மதாஸ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் காந்தியின் சத்திய சோதனை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் சிவத்திரு.சைதனியா சுவாமிகள் வழங்கவுள்ளதுடன் காந்தி நினைவுப் பேருரையினை வெளிச்சம் பத்திரிகை ஆசிரியரும் விமர்சகருமான இரா.கருணாகரனும் நிகழ்த்தவுள்ளனர். (3)

## கிளிநொச்சி-தட்டுவன் கொட்டியில் வெடிகுண்டுகள் கண்டுபிடிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி - தட்டுவன் கொட்டி பகுதியில் வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் நேற்று கண்டுபிடிக்கப்பட்டன.

அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் ஒரு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்று, அதில் படுகாயமடைந்த இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், தட்டுவன் கொட்டி பகுதி முழுவதும் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை அங்கிருந்து அகற்றுவதற்குரிய நீதிமன்றத்தின் உத்தரவினைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-104-316)

## ஏடு தொடக்கல்

(யாழ்ப்பாணம்)

சிவகுரு ஆதீனத்தில் நாளை வியாழக்கிழமை விஜயதசமியன்று காலை 10 மணிக்கு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் ஏடு தொடக்கப்படும். அத்துடன் சிறுவர் வகுப்பு மற்றும் ஆன்மிக வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.

தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புவோர் மற்றும் வகுப்புகளில் இணைய விரும்புவோர் ஆதீன அலுவலகத்துடன் 077 222 0103 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (3)

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையில் நாளை வியாழக்கிழமை விஜயதசமியன்று ஏடு தொடக்குதல் நிகழ்வு இடம் பெறும்.

அத்துடன் அறநெறி மற்றும் பரதநாட்டிய வகுப்புகளுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர். மேலதிக விபரங்களுக்கு 021 222 76 78 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## சிறுவர் தின நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம் பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வரணி ஆசிரியவாண்மை விருத்தி மத்திய நிலைய விரிவுரையாளர் கு.நந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8-30)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘சீன வெடி’ பயன்படுத்தத் தடை!

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் தடைசெய்யப்பட்ட மற்றும் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட “ஹக்கா பட்டாசுகள்” மற்றும் “சீன பட்டாசுகள்” ஆகியவற்றைப் பயன்படுத்துபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.**

நாட்டின் சில பகுதிகளில் பட்டாசுத்தொழிலிலிருந்து வெளியிடப்படும் மூலப்பொருட் கள் மற்றும் பிற இரசாயனங்களைப் பயன்படுத்தி “சீன பட்டாசுகள்” எனப்படும் சட்ட விரோத வெடிபொருட்கள் தயாரிக் கப்படுவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த “சீன பட்டாசுகள்” பட்டாசு மற்றும் பட்டாசு உற்பத்திக்கு பயன்படுத் தப்படும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி “ஹக்கா பட்டாசுகள்” எனப்படும் சட்டவிரோத வெடிபொருட்கள் தயாரிக்கப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விவசாய நிலங்களிலிருந்து காட்டு விலங்குகளை விரட்ட இவை பரவலாகப் பயன் படுத்தப்படுவதாகவும் இந்த சட்டவிரோத வெடிபொருட்களால் மக்கள் மற்றும் வன விலங்குகளுக்கு பல கடுமையான காயங்கள் மற்றும் இறப்புகள் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெடிபொருட்கள் குறிப் பிடத்தக்க சுற்றுச்சூழல் மற்றும் பாதுகப்பு சவால்களையும் ஏற் படுத்தி உள்ளதாகவும் கண் டறியப்பட்டுள்ளது. இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை பொலிஸ் துறையினருடன் இணைந்து நாடு முழுவதும் சிறப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்தப் பாது காப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (நி)

# இன்று முதல்

## தனியார் பேருந்துகளில் பயணச்சீட்டு கட்டாயம்

(கொழும்பு)

மாகாணத்துக்குள் தனியார் பேருந்துகளில் பயணிக்கும் அனைத்து பயணிகளும் செல்லுபடியான பயணச்சீட்டு களைப் பெறுதல் அவசியம் என மேல் மாகாணப் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்துக்கு ஒத் துழைப்பை வழங்க மறுக்கும் பயணிகள் மற்றும் நடத் துநர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயணச்சீட்டை வழங்கத் தவறும் நடத்துநர்களுக்கு 750 ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இன்று முதல் பயணச்சீட்டு இல்லாத பயணிகளுக்கு 100 ரூபாய் அபராதம் மற்றும் கட்டணத்தை விட இரண்டு மடங்கு அபராதம் விதிக்கப்படும்.

எதிர்காலத்தில் குறித்த அபராதத் தொகையில் திருத் தம் மேற்கொள்ளப்படும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பயணிகள் முச்சக்கர வண் டிகளின் பதிவு மற்றும் உரிமம் 2002 விதிமுறைகளின் கீழ் மீண்டும் ஆரம்பமாகும்.

பயணிகள் போக்குவரத் தில் இயங்கும் அனைத்து முச்சக்கர வண்டிகளும் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் செல்லுபடியாகும் அனுமதிகளை வைத்திருக்க வேண் டும் என்பதே இந்த விதிகளின் முக்கிய நோக்கம் என மேல் மாகாணப் போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள் ளது. (நி)

# சஷீந்திர ராஜபக்ஷ மீண்டும் விளக்கமறியலில்



(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக் ஷவை எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் ஊழல் சந்தேகத்தின் பேரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் சந்தேக நபரின் சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களைப் பரிசீலித்த கொழும்பு தலைமை நீதவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இதன்போது சிறைச்சாலை மருத்துவமனை மற்றும் பிற மருத்துவமனைகளில் சந்தேக நபருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்த முழு அறிக்கையையும் அடுத்த நாள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கும் நீத வான் உத்தரவிட்டார். (நி)

# மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள 19 பெண் கைதிகள் சிறைகளில்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது மொத்தம் 19 பெண்கள் மரண தண்டனையை எதிர்நோக் கியுள்ளனர் என்று சிறைச் சாலைகள் செய்தித் தொடர் பாளர் ஜகத் வீரசிங்க தெரி வித்தார்.

மேலும் 24 பெண்கள் தற் போது ஆயுள் தண்டனை அனுபவித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

225 பெண்கள் தண்டனை பெற்ற கைதிகள் என்றும் 1,304 பெண்கள் தடுப்புக் காவலில் உள்ளனர்.

இலங்கை முழுவதும் உள்ள 10 சிறைகளில் உள்ள 1,529 பெண்களில் இவர்களும் அடங்குவர் என சிறைச்சாலை செய்தித் தொடர்பாளர் ஊடகங்களுக்கு அளித்த செவ்வியின் போது தெரி வித்தார். (நி)

# ஏடு தொடக்கல்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அறிவாலய மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை விஜய தசமியன்று காலை 7.30 மணிக்கு பேராசிரியர் வ.மகேஸ்வரன் ஏடு பிடித்து விரல் தொட்டு எழுத்தறி விப்பார்.

முன்பதிவுகளுக்கு 078 526 9211 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)

# வண்ணை வெங்கடேச வரதராஜருக்கு இன்று தேர்த்திருவிழா




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை கொடியேற்றத் துடன் பக்திபூர்வமாக ஆரம்ப மாகியது.

தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், நாளை வியாழக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம் பெறுவுள் ளதென ஆதீன மகா சபையினர் அறிவித்துள்ள னர். (3)

# சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் இருவர் கைது



(கொழும்பு)


கொழும்பு வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 9,200 சட்டவிரோத சிகரெட்டுகளை சுங்கவரியின்றி நாட்டிற்கு கொண்டு வந்த இரு வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோதரை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட துறைமுகத்திற்கு அருகில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட் டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கதிர்காமம் மற்றும் புளுமெண்டல் பகுதிகளைச் சேர்ந்த 21 மற்றும் 50 வயதுடையவர்கள் என தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மோதரை பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (நி)


# கண்ணீர்க் காணிக்கைகள்



எமது வாழ்வில் ஒளியேற்றிய
எமது மதிப்பிற்குரிய ஆசான்

திருவாளர்
சதாசிவம் கைலாசபதி

அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகள். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பிற்குரிய மாணவர்கள்
2002 ஆம் ஆண்டு க.பொ.த (சா.த)
சதாபொன்ஸ் கல்வி நிறுவனம்
அல்வாய்.

(1612)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வடமராட்சி துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவத்தின் வெண்ணெய்த் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.



எழுநாவினால் தயாரித்து வெளியிடப்பட்ட "நீதிக்காக நீண்ட காத்திருப்பு" எனும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆவணப்படம் திரையிடலும், செம்மணி தொடர்பான கவிதைகள் "வாசலிலே கிருஷாந்தி" என்னும் நூலின் அறிமுக விழாவும் அச்சுவேலி தெற்கு, கலாநிதி சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினரும் கலாநிதி சனசமூக நிலையத் தலைவரும் ஆகிய பி.நேருஜன் தலைமையில் இடம்பெற்றது.

(படம் - கஜிந்தன்)



யா/ நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி.வசந்தராணி சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் "ஆழிமுத்து" எனும் மலர் வெளியிடப்பட்டது.



யாழ்ப்பாணம் மணற்பகுதி புத்தூர் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் அறநெறிப் பாடசாலையின் ஓராண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு முத்தமிழ் அரங்கம் நிகழ்வு வீனஸ் விளையாட்டுக்கழக அரங்கில் அண்மையில் இடம்பெற்றது.

(படம் - கஜிந்தன்)



யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் "ஏக் பெட் மா கே நாம்" என்ற பசுமை செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணக் கலாசார மண்டப வளாகத்தினுள் 10இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டு 20 மரக்கன்றுகளை நாட்டினர்.

(படம் - சிவசாந்தன்)



வல்வெட்டித்துறை இரத்ததான சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 81ஆவது இரத்ததான முகாம் யாழ். போதனா இரத்த வங்கியினரது பங்கேற்பில் வல்வெட்டித்துறை, நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹாலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

(படம் - மகாலிங்கம்)



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் புராதனமானதும் முதன்மையானதுமான சாட்டி மாதா திருத்தல வருடாந்த திருவிழா கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் பல குருக்களின் கூட்டிணைவில் சிறப்பாக இடம்பெற்றது.

(படம் - சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை வழிநடத்த அன்பால் போஷியுங்கள்



## இன்று சர்வதேச சிறுவர் தினம்


சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி 2025 ஆம் ஆண்டிற்குரிய தொனிப்பொருளாக **"உலகைவழி நடத்த - அன்பால் போஷியுங்கள்"** என்பது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிநாதமாக இருந்து எதிரொலிப்பவர்கள் குடும்பமும் பாடசாலையும் என்று கூறின் மாற்றுக் கருத்திற்கு இடமேதுமில்லை. உரிமைகள் மறுக்கப்பட்டு உணர்வுகள் நசுக்கப்பட்டு கொடுமையின் பிடியில் சிக்கியுள்ள சமூகத்தை காப்பாற்றுவதற்காகவே சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறே ஆதிகாலத்தில் சிறுவர்கள் தமது உரிமைகளை இழந்து சிக்கித் தவித்த காலத்திலே இந்தச் சிறுவர்களைக் காப்பாற்றுவதற்காக 1923ஆம் ஆண்டில் இங்கிலாந்தைச் சேர்ந்த "எக்லன்ரைன் ஜெப்" என்ற பெண்மணியால்சிறுவர்உரிமைகள் பிரகடனம் உருவாக்கப்பட்டது.

பின்னர் உலகளாவிய ரீதியில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டு இலங்கை அரசாங்கமும் 1990இல் இதனை ஏற்று கையொப்பமிட்டுக்கொண்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் பிரகடனம் தான் இன்று சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மட்டுமன்றி சிறந்த கண்காணிப்பு மூலம் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் அரும்பாடு பட்டு வருகின்றது. இந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கு என்று குடும்பமும் பாடசாலையும் முக்கிய பங்காற்றிவருகின்றன.

ஒருகுழந்தை தாயின் கருவறையில் இருந்து 18 வயதை அடையும் வரை சிறுவராகவே கருதப்பட்டு, அவருக்கென உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. தாயின் கருவறையில் வளரும் குழந்தையை அழிக்கக் கூடிய உரிமை தாய்க்கே வழங்கப்படவில்லை எனின் குழந்தைக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எண்ணிப் பிரமிக்க வேண்டியுள்ளது. குழந்தையொன்று உயிர்வாழவேண்டும், மேம்பாடு, முன்னேற்றம் அடைய வேண்டும், பாதுகாக்கப்படவேண்டும், பங்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் இந்தஅடிப்படைக் கோட்பாடுகளை வைத்தே சிறுவர் உரிமைகள் பிரகடனம் வரையறுக்கப்பட்டுள்ளது. இவற்றை காப்பதற்காகவே குடும்பமும் பாடசாலையும் தன்னாலான பணிகளை இன்றும் செய்துவருகின்றன.

குழந்தையொன்று பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்கு எவராலும் மாற்றுக் கருத்துச் சொல்லமுடியாது. எமது சமய வரலாற்றிலே குளத்திற் கருகில் குழந்தையை இருத்திவிட்டு திருஞானசம்பந்தரின் தந்தையார் குளத்திலே திருமுழுக்கிடச் சென்ற சந்தர்ப்பத்தில் குழந்தையாகிய சம்பந்தர் தந்தையைக் காணாது தவித்த வேளையில் சிவனும் பார்வதியும் குடும்ப சமேதராகத் தோன்றி சம்பந்தருக்கு பாலூட்டி மகிழ்வித்த கதை கூட எமது சமய வரலாற்றிலே இன்றும் நிலைத்திருக்கின்றது. இந்த வகையிலே குழந்தையை பாதுகாக்க வேண்டியது குடும்பம், பாடசாலை என்பதற்கும் மேலாக கடவுளிற்கு கூட இங்கு கடப்பாடு உள்ளது என்பது வரலாற்று ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றாக காணப்படுகின்றது.

குழந்தையொன்று பிறக்கின்ற போது நல்ல குழந்தையாகவே பிறக்கின்றது. அதனுடைய எதிர்காலம் அதன் வளர்ப்பினிலே தங்கியுள்ளது. இதற்காகத் தான் "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று சொல்லப்படுகின்றது. குழந்தை எதுசரி, எதுபிழை என பகுத்தறிய ஆற்றலற்றது. ஆகையால் அதனை நற்பிரஜையாக வளர்த்தெடுப்பது அனைவரின் கடமையாகும். சிறுவர் சிறுவயதில் பழகுகின்ற பழக்கம் தான் அதன் ஒழுக்கமாகவும் பின்னர் அதன் வழக்கமாகவும் பரிணமிக்கின்றது. எனவே சிறந்த சிறுவர் சமுதாயத்தைஉருவாக்கவேண்டும் எனில் குடும்பமும் பாடசாலையும் முக்கிய பங்காற்ற வேண்டும் என்பது எவராலும் மறுக்க முடியாத ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.



பிள்ளையொன்று பிறக்கின்ற போது தமது அடையாளத்தைப் பதிவு செய்ய வேண்டியது அதனுடைய உரிமையாகவே இன்றும் இருந்து வருகின்றது. ஆனால் சிலவேளைகளில் காலவர்த்தமானங்களால் ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாக சில பிள்ளைகள் தமது அடையாளத்தை பதிவு செய்யாது இருக்கின்ற நிலை கூட இன்றும் இருந்து வருகின்றது. இத[illegible] குடும்பத்தி[illegible] இருந்தாலும் குடும்பம் இதில் அக்கறையற்று செயற்படும் நிலை கூட இன்றும் இருந்து வருகின்றது. இதனை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து அதன் அடையாளத்தை பதிவு செய்ய முன்வரவேண்டும். பாடசாலையில் குழந்தையொன்று சேர்க்கப்படும் போது பாடசாலை முதல்வரால் கேட்கப்படும் முதல் கேள்வி அதன் பிறப்புச் சான்றிதழ் ஆகும். அதனைத் தொடர்ந்து புலமைப்பரிசில்பரீட்சை, க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப்பரீட்சை, அடையாள அட்டை பெற்றுகொள்ளல் போன்ற விடயங்களிற்கும் இந்த பிறப்புச் சான்றிதழின் தேவைப்பாடு முன்னுரிமைப்படுத்தப்பட்டு இவை பெற்றுகொள்வதற்கு பாடசாலைச் சமூகமும் இன்றும் பங்காற்றி வருகின்றன என்று கூறிக் கொள்வோமெனில், சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பாடசாலைகள் எத்துணை பங்காற்றி வருகின்றன என்பதனை எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். பங்களிக்க உரிமைகள் உள்ளவர்கள். சிறுவர் உரிமைகள் சமவாயத்திலே இவை தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ஆனால் நாம் சில கட்டுப்பாடுகள், பாரம்பரிய முறைமைகள், கலாசார விழுமியங்கள் என சில வரம்புக்களை இட்டு அவற்றைத் தடை செய்து வருகின்றோம். உண்மையிலே சிறுவர்களின் உச்ச நலனை அடிப்படையாகக் கொண்டு அவர்களிற்கு கிடைக்க வேண்டியதனை வழங்காது விடுவது துஸ்பிரயோகமாகவே கணிக்க வேண்டியுள்ளது. விளையாட்டு, பொழுதுபோக்கு, சமூக விடயங்களில் இணைந்துகொள்வது சிறுவர்களின் உரிமையாகும். ஆனால் கல்வி என்றதோர் கருப்பொருளை வைத்து இவற்றை வழங்குவதற்கு எத்தனையோ பெற்றோர் பின்னிற்கின்ற நிலையே இன்றும் இருந்து வருகின்றது. பாரதியார் த[illegible]லே "ஓடி விளையாடு பா[illegible]ன்றும் ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்றும் கூடி விளையாடு பாப்பா என்றும் ஒரு குழந்தையை வையாதே பாப்பா" என்றும் குழந்தைகளுக்கும் எமக்கும் சிறந்தோர் பாடத்தை வழங்கியுள்ளார்.

ஆரம்ப காலத்திலே நிலா முற்றத்தில் இருந்து பாட்டியின் மடியிலே கதைகூறல், பாடல் என்பவற்றுடன் உணவு உண்டு மகிழ்ந்த குழந்தைகள் இன்று தொலைபேசி, தொலைக்காட்சி முன்னிலையில் உணவு உண்டு மகிழ்கிறார்கள். நிலா முற்றத்தில் குழந்தைகளுடன் இருந்து பகிர்ந்து கொண்ட அனுபவங்கள் இன்று அற்றுப்போய் குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையில் இடைவெளி ஏற்பட நாகரீக மாற்றங்கள் என்ற போர்வையில் குழந்தைகளின் உணர்வுகள் மழுங்கடிக்கப் பெறுகின்றன. இதனால் பிள்ளைகளில் ஏற்படுகின்ற மாறுதல்கள், மாற்றங்களைக் கண்டு கொள்ளாத பெற்றோர்கள் இன்றும் இருந்து வருகின்றார்கள். இந்தநிலை எமது சமூகத்தில் மாற வேண்டும். இதனை மாற்றுவதற்காக இன்று குடும்பம், பாடசாலை என்பவற்றிற்கிடையில் பல்வேறு இணைப்புகளை ஏற்படுத்தும் முகமாக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொண்டு சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முயன்று வெற்றியையும் கண்டுள்ளோம். இதன் வெளிப்பாடாகவே இன்று ஒவ்வொரு விடயங்களும் உடனுக்குடன் வெளிப்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு களம் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன என்று கூறுவதில் பெருமை கொள்ள வேண்டியுள்ளது.

எனவே எமக்கென தனிக் கலாசாரத்திலே பிறந்து நகர்ந்து கொண்டிருக்கின்ற இந்த சிறுவர் சமுதாயம் வெற்றியின் விளிம்பிலே வீறுநடை போடுவதற்கு இந்தச் சிறுவர் உரிமை சமவாயம் இன்று கீதையாக இருந்து ஒவ்வொரு குடும்பத்தையும் பாட சாலையையும் விழிப்படைய வைத்து சிறந்த சிறுவர் சமுதாயத்தை உலகிற்குத் தர பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது என்று கூறிக் கொள்வதில் பெருமை கொள்ள வேண்டியுள்ளதுடன் இவ் ஆண்டிற்குரிய தொனிப்பொருளான **"உலகை வழிநடத்த - அன்பால் போஷியுங்கள்"** என்பதும் இதன் அடிநாதமாகவே பிறந்து நமக்கொரு நல்ல பாடத்தை பெற்றுத்தர முயன்று கொண்டிருக்கின்றது எனின் அதுவும் மிகையாகாது எனலாம்.

**திரு.சி.சிவகரன்,**
**சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர், முல்லைத்தீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறையானின் வாழ்க்கை இரகசியம்: சிற்றுடலில் உள்ள பேரதிசயமும்! கறையானின் தனித்துவமும்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

சமூக அந்தஸ்துள்ள பூச்சிகளுள் தேனீ, குளவிகள், எறும்புகள் மற்றும் கறையான்கள் என்பன நம் நினைவுக்கு வருகின்றன. சமூக வாழ்க்கை வாழும் சிறு பிராணிகளில் குறிப்பாக மண்ணுள் வாழும் கறையான்களில் எத்துணை இறுக்கமான தற்காப்பு நடைமுறைகள். அதிலிருக்கும் சிறப்பம்சங்களை அறியும் போது கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பதனை இங்கும் காணலாம். அதிசயம் என்னவெனில் அதிலிருக்கும் கட்டமைப்புக்களை விஞ்ஞான ரீதியில் அணுகும் போது பிரமிக்கத்தக்க பொறிமுறைகளை அவை ஏற்படுத்தித் தம்மை தற்காத்துக் கொள்கின்றன. இவ்வாறான தற்காப்பு செயன்முறைகளூடாக அவற்றுக்கு எம்மையும் மிஞ்சிய அறிவினை பொறிமுறையை (innate mechanism) இயற்கையே கொடுத்திருக்கின்றதனைப் பார்க்கலாம். வெறுமனே கறையான் எனும் சிறிய பூச்சியினத்தை நாம் பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தி அழித்து விடலாம் என நினைத்துவிடக்கூடாது. அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் செய்யப்படும் ஆய்வில் தோண்டத் தோண்ட புதுமைகளாக எம்மையே பிரமிக்கவைக்கும் கட்டமைப்புக்களையும் பொறிமுறைகளையும் ஏற்படுத்தி வாழுகின்றன என்பதனையும் அதனால்தான் முழுமையாகக் கறையான்களை அழித்தொழிப்பது மிகவும் சிரமமானதாக இருப்பதனையும் காணமுடிகின்றது. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பதனை நினைவிலிருத்தி அதனில் காணப்படும் பலவீனத்தை அறிந்து அதன் மூலம் கறையான்குடியைக் கட்டுப்படுத்தலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கறையானின் வாழ்க்கை முழுமையாக மண்ணிலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. மண் உயிர்ப்புடன் இருப்பதற்கு இவ்வாறான உயிரினங்களும் முக்கியமான காரணமாகும். நம்மாழ்வார் கூறியது போல கறையானை ஒரு பூச்சி பீடையாகவே நாம் எண்ணுகின்றோம். ஆனால் மண்ணிலுள்ள மக்காத சேதனப்பொருட்களை பெருங்குடும்பமாக வெட்டியுண்டு மண்ணை வளப்படுத்தும் வலிமை இச்சிறிய பூச்சிகளுக்குண்டு. வசந்த காலம் வரும் போது மட்டும் இறகு முளைத்து கறையான்கள் ஈசல்களாகப் புற்றிலிருந்து வெளிக்கிளம்பும். இவ்வாறு வெளிக்கிளம்பும் ஆண் மற்றும் பெண் கறையான்களில் சிறு எண்ணிக்கையானவையே தப்பிப் பிழைத்து கலவியிலீடுபட்டு தமக்கேயுரித்தான மண்வளைகளை மண்ணும் குறிப்பாக மணல் தன்மையானதும் உமிழ்நீரும் தமது கழிவினையும் சேர்த்தெடுத்து பிசைந்து கட்டி அதனுள்ளிருந்து தாவர பாகங்களை வெட்டியுண்ணும். வெட்டியுண்ணுவதற்காக ஊதிப்பெருத்த ஒரு சோடி சிபுகம் (Mandible) என்னும் வாயுறுப்பை பயன்படுத்துகின்றன. கறையானின் சமிபாட்டுத் தொகுதியில் செலுலேசு நொதியம் சுரக்கப்படுவதனால் செலுலோசு துணிக்கைகளை பிரிந்தழியச் செய்து உணவாக்கிக் கொள்ளும் சிறப்பையும் கொண்டிருக்கின்றன.

சிறிய துளைகளை கறையான் புற்றில் அங்குமிங்குமாக ஏற்படுத்தி அதனூடாகவே அவை ஊர்ந்து திரிகின்றன. கறையான் குடிக்கு தேவையான காற்றுச்சுழற்சிக்காக பெருந்துளைகளையும் கறையான் புற்றினை உருவாக்கும் போதே உருவாக்கிவிடுகின்றன. ஆனாலும் சுவாசிக்கத் தேவையான ஒட்சிசனை மட்டுப்படுத்தும் செயன்முறைகள் இக்குடிலில் இருப்பதனால் சில வேளைகளில் வெளிச்சென்றுவரும் கறையானில் நோய்க்கிருமிகளான பூஞ்சணம் அல்லது பக்ரீறியா இருந்தால் ஒன்று மற்றையதை



உணர்கொம்பினால் வருடி (Grooming) தங்களால் ஏனையவற்றுக்கு அந்த நோய்க்கிருமிகள் தொற்றாதவாறு பார்த்துக்கொள்கின்றன. சுத்தமாக இருப்பதனை உறுதிசெய்வதில் இவை தனித்துவமானவை.

கறையானில் இராணி பாதுகாப்பான பகுதியில் அதற்கென குடிலமைக்கப்பட்டு தங்க வைக்கப்படும். இது முட்டையிடும் இயந்திரமாகவே கணிக்கப்படுகின்றது. இராணி தங்கியிருக்கும் பகுதி அழிக்கப்பட்டால் கறையான் புற்று நிர்மூலமாகிவிடும். ஆனால் அத்தனை சுலபமாக இராணி இருக்கும் பாதுகாப்பான அறையை அழிக்க முடியாது. மழைநீர் எந்தப்பக்கத்தாலும் செல்லாதவாறான இடத்திலேயே இராணிக் கறையானின் அறை காணப்படும். கறையான்கள் தமக்கு தேவையான உணவை சேதனப் பதார்த்தங்களிலிருந்தும் கறையான் குடிலில் வளர்க்கப்படும் ரேமிற்றோமைசிசு (Termitomyces ) எனப்படும் காளான்வகை பூஞ்சணத்தை வளர்த்து அந்த பூஞ்சணத்தை குடிலில் உள்ள இளைய கறையான்கள் உணவாக்கும். இந்த காளான்வகை பூஞ்சணத்தை மண்ணிலிருந்து பிரித்தெடுத்து அவற்றை வளர்த்துக் கொள்கின்றன. நுண்ணுயிரியலாளர்களையே பிரமிக்க வைக்கும் செயன்முறையாக இவ்வாறான பூஞ்சணத்தை பிரித்தெடுத்து தமது குடிலில் இறந்த தாவர பாகங்களின் துணிக்கைகளை தமது வாய்ச்சுரப்பின் (உமிழ்நீர்ச்சுரப்பு) மூலமாக ஒட்டி கூடுபோல கட்டியிருக்கும் அறைகளில் மேற்குறிப்பிட்ட பூஞ்சணத்தை வளர்க்கின்றன. இதனை பூஞ்சணத் தோட்டம் (Fungus garden) என அழைப்பர்.

ஆச்சரியம் என்னவெனில் இந்த வகையான பூஞ்சணத்தில் வேறு பூஞ்சணமோ அல்லது பக்ரீறியாவோ தொற்று ஏற்படுத்தாதவாறு கறையான்களின் எதிர்ப்புத் திறன் உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஒரு வகை பக்ரீறியாவை இவை வளர்த்து நுண்ணங்கியெதிர்ப்பு திறனை (antibiotic mechanism) உருவாக்கி ஏனைய தொற்றுக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்கின்றன. கறையான் குடிலினுள் காபனீரொட்சைட்டின் அளவினை அதிகரித்து எனைய காற்றுச் சுவாசம் (oxygen needed) தேவைப்படும் நுண்ணங்கிகளிலிருந்து தமது குடிலில் உள்ள பூஞ்சண தோட்டத்தையும் இளைய கறையான்களையும் பாதுகாத்துக் கொள்கின்றன. இங்கே கறையானுக்கும் நுண்ணங்கிக்குமான ஒன்றிணைந்த (Symbiotic) இணைப்பு அவற்றின் உணவுத் தேவைக்கும் பாதுகாப்பிற்கும் உறுதுணையாகியிருக்கின்றது.

கறையான்களில் வேலையாள் கறையான்கள் இரைதேடித்திரிந்து இறுதியில் இறந்த தாவர பாகங்களினை சேகரித்து தமது குடிலுக்கு கொண்டுவரும். அந்த உணவினை தமது உமிழ்நீருடன் கலந்து பெறுமதிசேர்த்து பாதுகாத்துக் கொள்கின்றன. கறையான் புற்றுக்குள் தமது உடல் பருமனில் துளைகள் அமைத்து அதனூடாக சென்று வரும். இந்த துளைகள் பெரிதாக இருக்காதவாறு கட்டுகின்றன. தமது குடிலுக்கு பாதகம் ஏற்படும் போது தாம் அமைத்துள்ள துளைகளைக் குறிப்பிட்ட வகை தலைபெரிதான கறையான்களைக் கொண்டு அடைத்துவிடுகின்றன.

வயலில் கறையான்கள் லாவகமாக சென்று வருவதை அவதானித்தால் அவை அங்கே தேவையான உணவினை பெற்று அவற்றை தமது குடிலுக்குள் எடுத்துச் சென்று கறையான் குடிலினை வளர்த்துக் கொள்கின்றன. கறையான்களில் குறிப்பிட்ட மழை காலத்தை அண்டி தமது இனப்பெருக்கத்தை செய்யவதற்காக இறகுள்ள கறையான்கள் (winged termites) உருவாகும். இவற்றை நாம் ஈசல்கள் என அழைக்கின்றோம். ஈசல்கள் வெளிச்சத்தை நோக்கி வெளிக்கிளம்பிப் பறந்து வேறிடத்தில் வாழத்தொடங்கிவிடும். இது கறையானுக்கே உரித்தான இயற்கையின் தன்னலமற்ற கொடுப்பனவு ஆகும். வேலையாள் கறையான்கள் நிலத்தினுள் மட்டுமல்ல மரங்களில் மற்றும் கட்டடங்களின் சுவர்களில் மண்ணினையும் உமிழ்நீர்ச்சுரப்பினையும் தமது கழிவினையும் கலந்து சுவர் அமைத்து அதனூடாக தமது கறையான் புற்றுக்களினை உருவாக்கி அதனூடாகச் சென்று கட்டடங்களிலுள்ள தாவரப்பகுதிகளை உணவாக்கும். இதனாலேயே கட்டடங்களை அமைப்பதற்கான திட்டம் தீட்டும் போது கறையான்கள் இல்லாத (Termite proof) தன்மையை மண்ணினுள் ஏற்படுத்துதல் அவசியமாகும். இதற்காக முன்பு குளோர்பைரிபொஸ் (Chlorpyrophos) எனப்படும் பூச்சிநாசினியை பயன்படுத்தினார்கள். பிற்காலத்தில் அதனது அதிகரித்த பாவனை காரணமாக எமது நாட்டில் அதனை தடைசெய்திருக்கின்றார்கள். மாறாக பைபுறோனில் (Fipronyl) எனப்படும் பூச்சிநாசினியை கறையான்களை கட்டுப்படுத்த பயன்படுத்துகின்றனர். எது எப்படியிருப்பினும் கறையான் இயற்கையாக எமக்கு குறிப்பாக மண்ணினுள் சேதனப் பொருட்களை பிரிந்தழியச்செய்து உக்க வைக்கும் செயலைச் செய்வதனால் நன்மை தரினும் விளைநிலத்தில் பயிர்களை அழிப்பதனாலும் சேமித்து வைக்கும் இடத்தில் சேதத்தை உண்டு பண்ணுவதனால் தீமையையும் செய்கின்றன. பலவகையான செயற்திறன்களை உள்ளடக்கிய இதனது வாழ்க்கைமுறை எமக்கும் ஒரு பாடமாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கூட்டத்துடன் தவறான பாதையில் நடப்பதை விட தனியாக சரியான பாதையில் நடப்பதே சிறந்தது. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampuril.lk

## பொது அமைப்புகளில் பொதுமக்கள் இடம்பெற வேண்டும்

பொது அமைப்புகள் என்பது பொதுமக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அமைப்புகளாகும்.

எனவே அந்த அமைப்புகளில் பொதுமக்களே இடம்பெற வேண்டும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக பொதுஅமைப்புகளில் மதகுருமார் இடம்பெறுகின்றனர்.

ஆம், மதகுரு என்போர் மதம் சார்ந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்டவர்கள்.

எனவே பொதுமக்களைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய பொதுஅமைப்புகள் பொதுமக்களால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

அதாவது பொது அமைப்புகளின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கள் பொதுமக்களில் இருந்து தெரிவுசெய்யப்படும்போதுதான், அந்த அமைப்புகள் மதசார்பற்ற அமைப்பாகக் கருத்திலெடுக்கப்படும்.

இதைவிடுத்து பொதுஅமைப்புக்கு மதகுரு ஒருவர் தலைமை தாங்குவாராயின், அங்கு அவர் சார்ந்த மதம் முன்னுரிமை பெறுவதாகிவிடும்.

உதாரணத்துக்கு பிரஜைகள் குழு என ஓர் அமைப்பு இருக்குமாயின், அதன் தலைமையை பொதுமக்களில் இருந்து தெரிவு செய்யப்படும் ஒருவரே ஏற்க வேண்டும்.

இதைவிடுத்து மதகுரு ஒருவர் அதன் தலைவராக இருப்பாராயின், அவரின் நடவடிக்கைகள் எவ்வளவுதான் நேர்மையாக இருந்தாலும் அது நிச்சயம் மத சார்புடைய அமைப்பாகவே பார்க்கப்படும்.

இவ்வாறான சூழ்நிலைகளில்தான் மதவாதம் என்ற சிந்தனை எழுச்சி பெறுகிறது.

ஆம், எங்கள் நாட்டில் இத்துணை அபத்தமும் அநியாயமும் நடப்பதற்கு மூலகாரணம் இந்த நாட்டைப் பீடித்துள்ள மதவாதமாகும்.

பெளத்தத்துக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில், பெளத்த துறவிகள் மதவாதத்துடன் இனவாதத்தையும் சேர்த்து தீயிட, அது இந்த நாட்டில் இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களைப் பலியெடுத்தது.

அதனாலன்றோ பெளத்த துறவிகள் மீது தமிழ் மக்கள் மிகுந்த ஆத்திரம் கொண்டுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், பெளத்த துறவிகள் போல நாமும் நடந்து கொள்வோமாயின் உங்களிடமும் மதவாதம் இருக்கிறது தானே என்ற பதிலே கிடைக்கப்பெறும்.

ஆக, மதத் தலைவர்கள் பொதுமக்களை வழிப்படுத்தலாம். மதம் சார்ந்த அமைப்புகளில் அங்கம் பெறலாம். ஆனால் பொதுஅமைப்புகள் என்று வரும்போது அதில் பொதுமக்களே பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.

அப்போதுதான் அந்த அமைப்பை மதசார்பற்ற அமைப்பாக மக்கள் ஏற்பதுடன் அதற்கான அங்கீகாரமும் கிடைக்கும்.

ஆகையால் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய அத்தனை பொது அமைப்புகளையும் பொதுமக்கள் நிர்வகிக்கக்கூடியதான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யும்போதுதான் அந்த அமைப்புகள் முன்னெடுக்கும் போராட்டங்களும் வெற்றி பெறும்.

# நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள பின்வாங்கும் நிலையில் முதலீட்டாளர்கள்

## அமெரிக்க அறிக்கையில் வெளியான தகவல்

(கொழும்பு)

நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ளமுடியாத நிலைக்கு முதலீட்டாளர்கள் தள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை தனது 2025 முதலீட்டு சூழல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேவையற்ற விதிமுறைகள், சட்ட நிச்சயமின்மை, அதிகாரிகளின் பலவீனங்கள் முதலீட்டாளர்களுக்கு சவாலாக உள்ளன , அரசாங்கம் ஏலவே கைச்சாத்தான ஒப்பந்தங்கள குறித்து மீண்டும் ஆரம்பத்தில் இருந்து பேச்சுவார்த்தை நடத்த முனைவது பாரிய சவாலாக உள்ளது.

தனியார் துறை தலைமையிலான திட்டங்கள் விமர்சனங்களுக்குள்ளாக்கப்படுவதோடு , அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை ஊக்குவிக்கும் போக்கையும் அதானி நிறுவனம் வடமாகாணத்தில் திட்டமிட்டிருந்த 400 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான எரிசக்தி திட்டத்தை கைவிட்டதை மேற்கோள் காட்டி அமெரிக்க வெளியுறவுத் துறை தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேவேளை, இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகளை செயற்படுத்துவதில் நிலைத்தன்மை இல்லாததாகவும், நிறுவன ஊழல் தொடர்ந்து நிலவுவதாகவும் காணப்படுகிறது.

புதிய நிர்வாகத்தின் கீழ் உயர்மட்ட அரசியல் இலஞ்சக் கோரிக்கைகள் குறைந்துள்ளன என்றாலும், சலுகை பெற்ற குழுக்களால் பாதுகாக்கப்படும் துறைகளில் ஊழல் நீடிக்கிறது என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பனை மரங்களுக்கு தீயிட்ட விஷமிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு பகுதியில் சமீபகாலமாக கடும் காற்றுடனான காலநிலை நிலவி வரும் நிலையில் புன்னையடிப் பகுதியில் பெறுமதி வாய்ந்த பனை மரங்களுக்கு நேற்றுமுன் தினம் (29) இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

நிலவிவரும் கடும் காற்றால் தீ ஏனைய பனை மரங்களுக்கும் பரவியதில் அதிகளவான பனை மரங்கள் தீயில் சாம்பலாகியுள்ளன.

பெறுமதிவாய்ந்த பனைகளுக்கு தீ வைக்கப்பட்டமை ஓர் நாசகாரச் செயல் இது குறித்து உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-7)

# மக்களின் எதிர்ப்பையும் மீறி கோப்பாயில் கொட்டப்பட்ட வைத்தியசாலைக் கழிவுகள்

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பகுதியில் தமது எதிர்ப்பினையும் மீறி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கழிவுகளைக் கொட்டியதோடு வைத்தியசாலை ஊழியர்கள் அவற்றுக்குத் தீ வைத்து விட்டு சென்றுள்ளதாக அப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சம்பவம்தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கோப்பாய் நன்னீர் திட்டம், விவசாய நிலங்களுக்கு அருகாமையில், உள்ள வெற்றுக்காணிக்குக்குள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான வாகனத்தில் வைத்தியசாலையின் கழிவுகளைக் கொண்டு வந்து கொட்டியுள்ளனர்.

அதனை அவதானித்த ஊரவர்கள், கழிவுகளைக் கொட்டுவது தொடர்பில் கேள்வி எழுப்பியபோது தாம் நீதிமன்ற அனுமதி பெற்றே இவ்விடத்தில் கழிவுகளைக் கொட்டுவதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். அதனை ஏற்க மறுத்த அப்பகுதி மக்கள் அது தொடர்பில் வலி. கிழக்கு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் கழிவுகளைக் கொட்டியவர்கள் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் கழிவுகளுக்குத் தீ வைத்து விட்டு அவ்விடத்தில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ள அப்பகுதி மக்கள் வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் உரிய விசாரணைகளை முன்னெடுத்து சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரினர். (ம-7)

# பேருந்து விபத்து மூவர் படுகாயம்

(மிஹிந்தலை)

கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து A9 வீதியில் மிஹிந்தலை, பலுகஸ் வெவப் பகுதியில் விபத்துக்குள்ளாகியதில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த பேருந்துடன் அதன் பின்னால் பயணித்த லொறியொன்று மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் பேருந்தில் பயணித்த மூன்று பயணிகள் படுகாயமடைந்த நிலையில் அவர்கள் மிஹிந்தலைப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு முன்னெடுத்து வருகின்றது. (ம-7)

# யாழ்.போதனாவில் இளம் தாய் உயிரிழப்பு

இடுப்பு வலி காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப்பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வற்றாப்பளை முள்ளியவளையைச் சேர்ந்த வினோதரன் வினோஜா (வயது-33) என்ற ஒன்றறை மாதக் குழந்தையின் தாயாராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) இடுப்பு வலி காரணமாக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (30) காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.சாட்சிகளை முள்ளியவளைப் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர், ஆசிரியர் இடமாற்றங்களை சமநிலைப்படுத்த நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



(கொழும்பு)

அதிபர், ஆசிரியர் இடமாற்றங்களை சமநிலைப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கல்வித் துறையில் இடமாற்றங்களை நிராகரிப்பது நீண்டகாலமாக நிலவும் நடைமுறையாக உள்ளது. இது இடமாற்றங்களுக்கு இணங்காத பொதுச் சேவையில் உள்ள ஒரே துறையாகும். இத்தகைய இடமாற்றங்களுக்கு இணங்கத் தவறிய ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இயலாமையுடைய மாணவர்களை பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பது தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய அடுத்த கல்வி யாண்டு முதல், அனைத்துத் துறைகளுக்கும் ஒரு ஒதுக்கீட்டு முறைமையின் அடிப்படையில் இந்தக் கொள்கை செயற்படுத்தப்படுவதுடன், இயலாமையுடைய மாணவர்களுக்கு தகுதி அடிப்படையிலான மாவட்ட ஒதுக்கீட்டு முறைமையின் மூலமாகவும் அனைத்துத் துறைகளுக்கும் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவுள்ளது எனவும் பிரதமர் தெரிவித்தார்.

மேலும், இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன், பல்வேறு மாவட்டங்களில் காணப்படும் கல்வி தொடர்பான பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பிலும் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. (ம-7)

## மரண அறிவித்தல்

### திருமதி இரவீந்திரன் மங்களபூபதி அம்மா (பெரியம்மா)



பிறப்பு : 18.02.1957 இறப்பு : 30.09.2025

உண்டுவத்தை, அல்வாயைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பு, உண்டுவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இரவீந்திரன் மங்களபூபதி அம்மா (பெரியம்மா) அவர்கள் நேற்று (30.09.2025) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் கனகசபை - இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும் கிருஷ்ண பிள்ளை - இராசதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் அமரர் இரவீந்திரனின் பாசமிகு மனைவியும் ஜெயந்தி (சுவீடன்), பாஸ்கரன் (லண்டன்), சுதாகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகராசா (சுவீடன்), நித்தியகலா (லண்டன்), அனுஷாந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் காருஜன், அவிஸ்னா (சுவீடன்) அவர்களின் பாசமிகு அம்மம்மாவும் திவ்யா, சோபியா, அஸ்மியா, ஆரபி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் கோபாலகிருஷ்ணன், கனகாம்பிகை, துரைச்சாமி (அமரர்), ஈஸ்வரி, கலாராணி, தங்கராஜா, தபேந்திரராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2025) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் உண்டுவத்தை அல்வாயில் உள்ள அவர்களது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
(தமயந்தி தசாதன் - பெறாமகள்)
077 572 9750

உண்டுவத்தை,
அல்வாய்.
(C-3998)

## ரோஹித எம்.பிக்கு எதிராக ராஜித தாக்கல் செய்த மனு தள்ளுபடி

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவுக்கு எதிராகத் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை உயர் நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக ரோஹித அபே குணவர்தன தேர்ந்தெடுக்கப்பட்டதைச் செல்லாததாக்குமாறு கோரி ராஜித சேனாரத்ன குறித்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

நேற்று (30) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் இரு தரப்பினரின் சமர்ப்பிப்புகளை மீளாய்வு செய்த மன்று, மனுவை நிராகரித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. (ம-7)

### ரக்பி...

யில் தனது இரண்டு குழந்தைகளுடன் படுகொலை செய்யப்பட்ட அருண விதானகமகே எனப்படும் "கஜ்ஜா"வும் இருந்துள்ளார்.

இந்தத் தகவலைப் பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மினுர செனரத் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் பொலிஸ் ஊடகப் பிரிவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில், பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## 10 கைக்குண்டுகள் கொழும்பில் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் அலுத்மாவத்தைப் பகுதியில் பை ஒன்றிலிருந்து நேற்று 10 கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின்போது இந்தக் கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம-7)

### மக்களுக்கு...

ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

தற்போதைக்கு அரசாங்கத்தின் சகல துறைகளிலும் எதிர்பார்த்ததை விட அதிகளவில் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

அதன் காரணமாக இனியும் வரிகளை விதிக்கவோ அதிகரிக்கவோ தேவையில்லை.

அதற்குப் பதிலாக வரிகளை மனிதாபிமான முறையில் மறுசீரமைக்கலாம். அதற்கான காலம் கனிந்துள்ளது.

அத்துடன் பொதுமக்களுக்குச் சலுகைகள், நிவாரணங்களை வழங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கந்தையா தர்மலிங்கம்



உடுவில் தெற்கு ஈஞ்சடி வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் செட்டி வீதி இணுவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட **கந்தையா தர்மலிங்கம்** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஞானவைரவர் கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

முருகையா குடும்பம்,
இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை
யாழ்ப்பாணம், இலங்கை.
(C-4001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லலித், குகன்...

மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகிய இருவரும் 2011 டிசம்பர் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமல் போனார்கள்.

பின்னர் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைய அதுவொரு கடத்தல் சம்பவம் என வெளிக்கொணரப்பட்டதுடன் விடயம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த நீதிமன்ற நடவடிக்கைகளின்போது சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலாளராகக் கடமையாற்றிய கோட்டாபய ராஜபக்ஷவிடம் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்படவிருந்தது.

இந்நிலையில் இது தொடர்பாக மீண்டும் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)






















## சுகவீனம்...

பயனளிக்காமல் நேற்றுமுன்தினம் இரவு மரணமடைந்துள்ளார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தொழில்நுட்பத் துறையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற குறித்த மாணவன் குடும்பத்தினருக்கு ஒரேயொரு பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## எரிபொருட்களின்...

லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 277 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 335 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 180 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒக்ரேன் 92 ரக பெற்றோல் மற்றும் சுப்பர் டீசல் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை. (ம-7)

## சாவகச்சேரியில்...

இதன்போது இருவர் படு காயமடைந்துள்ளனர். படுகாயமடைந்த நபர்கள் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## 100 பாடசாலை...

முன்னெடுக்க ஜப்பான் உத்தரவாதமளித்துள்ளது.

நிப்பொன் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கலந்துரையாடலின்போதே இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, ரோக்கியோவில் உள்ள இம்பீரியல் ஹோட்டலில் நிப்பொன் மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் யொஹெய் சசகாவவை நேற்றுச் செவ்வாய்க்கிழமை (30) காலை சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு யொஹெய் சசகாவா தனது தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக இதன்போது அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (ம-7)

## விவசாயிகள்...

யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையம் மீள் ஆரம்பிப்பு நிகழ்வு நேற்று மட்டுவிலில் நடைபெற்றது.

அங்கு விவசாயிகளிடம் கலந்துரையாடப்பட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தற்போது வருடத்திற்கு இருநூற்று

தொன் கீரிச்சம்பா அரிசி தேவைப்பாடு உள்ளதாகவும் ஆனால் நாட்டில் 160 ஆயிரம் மெற்றிக்தொன் கீரிச்சம்பா அரிசி மட்டுமே உற்பத்தி நடைபெறுவதாகவும் இந்நிலையிலேயே சம்பா அரிசி விலை அதிகரித்துச் செல்வதாகவும் தெரிவித்தார்.

மேலும் குறுங்காலத் தேவையை நிறைவுசெய்யும் வகையில் கீரிச்சம்பா அரிசியை இறக்குமதி செய்து சதொஷ விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கவும் தொடர்ந்து அதன் உற்பத்தி அளவை அதிகரிப்பது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

மேலும் களஞ்சிய வசதிக்கான தேவை உள்ளமையால் நாவற்குழி அரச களஞ்சியசாலையைப் பயன்படுத்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில் நாவற்குழி களஞ்சியசாலையில் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் வசந்த சமரசிங்கவால் அறிவுறுத்தப்பட்டது. (ம-7,33)

## போதை...

வருகின்றது எனத் தரவுகள் கூறுகின்றன. அதே போல இலஞ்ச ஊழல் ஒழிக்கப்பட்டு வருகின்றது. இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றுக்கும் முடிவு கட்டப்பட்டு வருகின்றது.

இலங்கையில் வாழும் மூவின மக்களும் ஓரணியில் திரள வேண்டும். அவ்வாறு நடந்தால் இலகுவில் முன்னோக்கிச் சென்றுவிடலாம். இதனையே எமது ஜனாதிபதி தோழர் எல்லா இடங்களிலும் வலியுறுத்தி வருகின்றார்.

எனவே இந்த இனவாதம் என்ற பிசாசுக்கு எமது நாட்டில் நிரந்தரமாக முடிவு கட்ட வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை நாம் முன்னெடுக்கும் போது பழைய பிசாசுகள் மீண்டெழுவதைக் காணமுடிகின்றது. பழைய திருடர்கள் ஓரணியில் திரண்டுள்ளனர். அதிகாரச் சதி மற்றும் சூழ்ச்சிகளைச் செய்ய முடியுமா? என்பது பற்றி ஆராய்கின்றனர்.

இனவாதத்தைத் தூண்டியேனும் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா? என்பது பற்றியும் கதைக்கின்றனர். இது பற்றியே ரணிலும் மகிந்தவும் அவரது வீட்டில் மந்திராலோசனை செய்கின்றனர்.

ரணிலும் மகிந்தவும் நம்பர் வண் திருடர்கள். கடந்த காலங்களில் மத்திய வங்கியில் கொள்ளையடித்தவர் தான் ரணில். இந்நாட்டில் போதைப் பொருள் வியாபாரிகளைப் பாதுகாத்தவர்தான் ராஜபக்ஷ.

எனவே இவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்படும் என்றார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

01.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Graduate, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
02.அளவெட்டி, இந்து, 1989, பரணி, Senior Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03.கொல்லன்கலட்டி - புன்னாலைக்கட்டுவன், இந்து, 1991, அனுஷம், Msc, Denmark Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
04.மட்டுவில் - மீசாலை, இந்து, 1985, கேட்டை, Computer Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
05.காரைநகர், இந்து, 1988, பரணி, Masters Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06.இணுவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor Of IT, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07.மானிப்பாய் - அச்சுவேலி, இந்து, 1987, பரணி, CIMA + Charted Accountant, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
08.காரைநகர் - நவாலி, இந்து, 1992, சுவாதி, Graduate, New Zerland + Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
09.குப்பிளான் - கொக்குவில், இந்து, 1990, கேட்டை, MBA Phd Director, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10.மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(5557)


# இந்தியர்கள் மூவர் கைது

பருத்தித்துறை - தும்பளைப் பகுதியில் சுற்றுலா வீசா மூலம் இலங்கை வந்த இந்தியர்களால் முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோதமான ஜோதிட நிலையம் நேற்று முற்றுகை இடப்பட்டதோடு மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிலையம் தொடர்பாக தும்பளைப் பிரதேச கிராம அலுவலர் பருத்தித்துறை நகரசபையின் கவனத்திற்கு கொண்டு சென்றதையடுத்து இவ்விடயம் தொடர்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (29)பருத்தித்துறை நகரபிதா வின்சன் டீ டக்ளஸ் போல் நேரில் சென்று நிலைமைகளை அவதானித்து குறித்த இந்தியர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஆனாலும் உத்தரவைமீறி நேற்றும் ஜோதிட நிலையம் இயங்கிய நிலையில் நகரபிதா பருத்தித்துறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்தை முற்றுகையிட்ட பொலிஸார் இந்தியப் பிரஜைகளின் கடவுச்சீட்டை பரிசோதனை செய்த போது குறித்த மூவரும் சுற்றுலா வீசாவில் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளமை தெரியவந்ததையடுத்து மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ம-7,60)


## மாப்பிள்ளை தேவை

01. சாவகச்சேரி, இந்து, 1995, கேட்டை, Justice Diploma in arts Phycologist, கனடா Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 44161
02.பருத்தித்துறை - அல்வாய், இந்து, 1996, அவிட்டம், MSc, Norway பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53101
03. பருத்தித்துறை, இந்து, 1994, விசாகம், High School Diploma, Canada Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 54171
04.சரவணை, இந்து, 1993, அஸ்வினி, Software Engineer, Singapore Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 54241
05.அல்வாய் - உடுப்பிட்டி, இந்து, 1993, ரேவதி, Bachelor of Engineering (Auckland), Electrical Engineer, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53766
06.மாதகல், இந்து, 1992, ரோகிணி, Civil Engineer, PHD (USA), UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 46435
07.வேலணை, இந்து, 1992, பூரம், ACCA Complete, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 33548
08.திருநெல்வேலி, இந்து, 1997, கார்த்திகை, PHD (Medical - UK) UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
09.Jaffna Town - இளவாலை, இந்து, 1991, கார்த்திகை, MBBS, FLAB 2, Doctor, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 37584
10.புங்குடுதீவு - நுணாவில், இந்து 1991, Personal Support Worker, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 42421

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
(5557)



## VN அக்கடமி
இரட்டையர்புலம், சண்டிலிப்பாய்

தரம் 01 முதல் A/L வரை
விஜயதசமி நன்னாளில்
புதிய கல்வியாண்டு 2026
தரம் 06 மாணவர்களை அனுமதிப்பதற்கான அனுமதிப்பரீட்சை
02.10.2025 (வியாழக்கிழமை) 3.30 pm - 5.00 pm வரை

- வடமாகாண தனியார் கல்வி நிலைய வரலாற்றில் முதற்தடவையாக அனுமதிப் பரீட்சை மூலம் தரம் 06 மாணவர்கள் உள் வாங்கப்படுகின்றனர்.
- அன்புக்குரிய பெற்றோர்களே! பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் குறித்தளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவார்கள்.
- அடிப்படை விஞ்ஞானம், அடிப்படை கணிதம், ஆங்கிலம், சிங்களம் ஆகியபாடங்கள் தரம் 06 உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கும் வரை கட்டணமின்றிக் கற்பிக்கப்படும்.

தரம் 05 தமிழ், சுற்றாடல், கணிதம்,நுண்ணறிவு ஆகிய பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக வினாத்தாள் அமையும்

077 500 5861 நிர்வாகி – வி.கஜரூபன் (C-3999)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3996) 076 825 7716 (ஆகாஸ்)



## வாகன சாரதி(AD) பணியாளர் வெற்றிடம்

- மின்சார உபகரணங்கள், நீர் குழாய்கள், விநியோகத்திற்கு வாகன சாரதி தேவை.(ஆண்கள்)
  - முன் அனுபவம் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
  - முன் அனுபவம் உடையவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும்
    - > EPF/ETF கொடுப்பனவு வழங்கப்படும்
    - > நிரந்தர தொழில்.
  - சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்.

ESS JEY ELECTRICALS, No.09, STANLEY ROAD, JAFFNA.
021 222 2564/ 021 222 7430
(5558)



## அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு 2026
புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான
புதிய தரம்-06
தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்" (5520)



கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
14 நாட்களில் Delivery (C-3995)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/- Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
சம்பளம் 30,000/- முதல் 50,000/-
(C-3995)
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com



## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது. (5527)



## கணக்காளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் விற்பனை நிலையம் ஒன்றிற்கு கணக்குத்துறையில் அனுபவம் வாய்ந்த கணக்காளர் தேவை.
ஆண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 148 4540
(C-3994)



## லைடன் புடவை நிலையம்
யாழ்ப்பாணம்



எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அனைத்து வகையான துணி வகைகள், ரெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் ஆண்களுக்கான ரீசேட்டுகள், மேற் சட்டைகள், காற்சட்டைகள், கேட்டின்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடைத் துணி வகைகள் போன்ற அனைத்து விதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்.

தீபாவளியை முன்னிட்டு எதிர்வரும் 12.10.2025 மற்றும் 19.10.2025 ஞாயிற்றுக்கிழமைகளிலும் எமது வியாபார நிலையம் திறக்கப்படும் என்பதனை மிகவும் மகிழ்வுடன் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

10% 01.10.2025 - 19.10.2025
Leyden Textile Center
410, Hospital Road, Jaffna. 021 222 2381 (C-3993)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெற் ஸ்தாபனத்தினால் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.